இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -21 வெற்றி -01

# நேர்மை நெறி

ஜனவரி 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

# (NERMAI NERI)

(Reg.No.349/2001)

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக்கெடும்

₹ 10

## லஞ்ச வழக்கில் நேரடி சாட்சியம் அவசியம் இல்லை
## சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு



## ஊழல் நம் நாட்டின் சாபம்

**PUBLISHED BY**

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.co.in
website:anticorruptionchennai.com

## நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்

### பணம் படுத்தும் பாடு

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயம். இங்கிலாந்து நாட்டின் தலைநகர் லண்டனின் மீது நாள்தோறும் குண்டு மழை பொழிந்து கொண்டிருந்த நேரம்.

அப்போதைய இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில். பி.பி.சி., வானொலி நிலையத்துக்கு போன் செய்து , தான் இன்னும் சில நிமிடங்களில் அங்கு வருவதாகத் தெரிவித்தார்.

காரணம்; அன்று இரவு பி.பி.சி., யின் தேசிய ஒலிபரப்பில் அவர் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்ச்சில் தன் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது , எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. எதிரிகள் குண்டு மழை பொழிந்து கொண்டிருந்ததால், நாடு முழுவதும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

சாலைக்கு விரைந்து வந்த சர்ச்சில், வழியில் வந்த ஒரு டாக்ஸியை நிறுத்தி, “பி.பி.சி., நிலையத்திற்குப் போக வேண்டும் ” என்றார். அதற்கு டிரைவர், ” டாக்சி வராது சார்! இன்னும் சிறிது நேரத்தில் சர்ச்சில் ரேடியோவில் பேசப்போகிறார். அதைக் கேட்பதற்குத் தான் நான் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறேன்!” என்றான்.

அதைக்கேட்ட சர்ச்சிலுக்குப் பெருமை பிடிபடவில்லை.. இந்த இருட்டில் தன்னை யார் என்று அவன் அறியாவிட்டாலும் தன் பேச்சுக்கு இத்தனை மதிப்பு கொடுக்கிறானே என்று நினைத்த அவர், அவனுக்கு அன்பளிப்பு தர விரும்பினார். உடனே, தன் கோட் பைக்குள் கையை விட்டு பத்து பவுண்டு நோட்டு ஒன்றை எடுத்தார்.

அவர் பணம் எடுத்ததைக் காரின் உள் வெளிச்சத்தில் பார்த்தான் அந்த டிரைவர். சட்டென்று அவன் கண்கள் சுடர் விட்டன. அடுத்த வினாடி---

விருட்டென்று அவர் கையிலிருந்த பணத்தைப் பிடுங்கிய அவன், அதைத் தன் பாக்கெட்டில் திணித்துக்கொண்டே, “ஏறி உட்காருங்கள் சார்; சர்ச்சில் பேச்சாவது மண்ணாங்கட்டியாவது, உங்களைக் கொண்டு போய் பி.பி.சி., நிலையத்தில் விட்டு விடுகிறேன்!” என்றான்.

அதைக்கேட்ட சர்ச்சில் அசைவற்று அப்படியே நின்றார்.



## தலைவர் மடல்

அன்பார்ந்த இயக்க உறுப்பினர்களை மீண்டும் தொடர்பு கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற இதழில் தங்களை சந்திக்காமைக்கு வருந்துகிறேன். அனைவருக்கும் எமது இனிய பொங்கல் மற்றும் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இப்புத்தாண்டிலேனும் ஊழல் பல்கிப் பெருகுவதில் இருந்து குறைந்து மக்கள் சுபிட்சம் பெறுவார்கள் என்று எதிர்பார்ப்போபமாக. ஆனால், நடந்து வருபவைகளைப் பார்க்கும் பொழுது இந்த எதிர்பார்ப்பு பெரும் பகற்கனவாகத்தான் ஆகும் என்று தெரிகிறது. தவிர ஊழல் கடுகளவும் குறைய வாய்ப்பில்லை என்பதும் தெரிகிறது. இருந்தாலும், நாம் மீண்டும் மிகுந்த ஈடுபாட்டுடனும் உத்வேகத்துடனும் செயல்பட வேண்டும்.

ஏன் இவ்வாறு கூறுகிறோம் என்றால், நம்மை அதிகார துஷ்பிரயோகம் மற்றும் முறையற்ற நிர்வாகத்தில் இருந்து பாதுகாக்க நாம் உருவாக்கிய நீதிமன்றங்கள் நமது எதிர்பார்ப்பிற்கு ஏற்ப செயல்படாத காரணமே. எனவே நாம் நீதித்துறையிலும் சீர்திருத்தங்களை கொண்டு வந்து ஊழல் வழக்குகளை உடனுக்குடன் கால வரையுடன் முடிக்கும் வண்ணம் உரிய சட்ட திருத்தங்கள் செய்ய ஆவண வேண்டும். ஒர் அரசியல்வாதி மீது ஊழல் வழக்கு பதிவு செய்தால் அவர் உயிர் உள்ளவரை இயலாத வண்ணம் இழுத்தடிப்பதை ஜெயலலிதா வழக்கில் பார்த்தோம். அதிகார துஷ்பியோகம் செய்து ஊழல் வழக்கை ஒன்றும் இல்லாமல் செய்வதை செந்தில் பாலாஜி வழக்கில் பார்க்கிறோம். ஆக ஆட்சி திமுக வாயினும் அதிமுக வாயினும் காட்சி ஒன்றுதான் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதுவே இன்றைய நிலையாக உள்ளது. இந்த நிலை நீடித்தால், ஊழல் வழக்குகள் பற்றிய சிறிதும் கவலை இன்றி ஊழல் எந்தவிதமான தடையுமின்றி, அரசியல்வாதிகளால் மும்முரமாக முனைந்து தற்போது போல் ஊழல் தொடர்ந்து செயலாற்றப்படும். ஊழலை எதிர்த்து போராடும் நம்மைப் போன்றோர் மனம் வருந்தி விரத்தியுற்று மடிவோமேயன்றி, வேறு எதுவும் நடக்கப் போவதில்லை.

எனவே நமது செயற்குழுவில் தீர்மானித்தது போல வழக்குகளை வாய்தாமேல் வாய்தாவாக இழுத்தடிக்கும் இன்றைய அவல நிலையை போக்குவதற்கு நாம் உரிய சட்டப் போராட்டம் நடத்த வேண்டும். உதாரணமாக, இன்றைய அமைச்சர், திரு செந்தில் பாலாஜி, அவர் அவர்களின் ஊழல் வழக்கை மட்டும் உற் றுநோக்கின், நமது நாட்டின் நீதி பரிபாலனம் எந்த நிலையில் ஊழல் செய்வோரை ஊழல் குற்றத்திலிருந்து தப்பிக்கவும் தொடர்ந்து ஊழல் செய்யவும் வகை செய்கிறது என்பது புரியும்.

2014 -15 இல், போக்குவரத்து கழகங்களில் பணி நியமனங்கள் செய்யப்பட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இந்த அறிவிப்பு சம்பந்தமான அனைத்து விவரங்களும் அதற்கு விண்ணப்பித்தவர்களின் முழு விவரங்களும் அன்றைய போக்குவரத்து துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜியிடம் போக்குவரத்து கழக மேனேஜிங் டைரக்டர் மற்றும் பணியாளர்கள் அளித்தனர். அந்த விபரங்களைப் பெற்ற அமைச்சர் பல்வேறு இடைத்தரகர்களை நியமித்து, பணி நியமனத்திற்கு விண்ணப்பித்தவர்களிடம், லஞ்சம் கொடுத்தால்தான் வேலை என்ற புரளியைக் கிளப்பி, ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு பதவிக்கும் இடைத்தரகர்ள் மூலம் ஒரு லட்சம் இரு லட்சம் மூன்று லட்சம் என்ற கணக்கில் பல கோடி ரூபாய் லஞ்சம் பெற்றார் என்பதே அவர் மீதான ஊழல் வழக்கு. இதில் வேதனை யாதெனில், இடைத்தரகர்கள் அனைவரும் போக்குவரத்து கழகங்களில் பணியாற்றிய கண்டக்டர் மற்றும் பிற பணியாளர்கள். ஆக அரசு ஊழியர்கள் அப்பாவி மக்களிடம் இருந்து வேலை பெற்றுத் தருவதாக பொய் வாக்குறுதி கொடுத்து லஞ்சம் பெற்று செந்தில் பாலாஜி அமைச்சரிடம் கொடுத்து உள்ளனர். மேலும், அறிவிக்கப்பட்ட காலியிடங்களை விட கூடுதலான நபர்களிடம் லஞ்சம் பெற்று விட்டனர். எனவே லஞ்சம் பெற்ற அனைவருக்கும் வேலை கொடுக்க இயலவில்லை

இதனால் ஏமாற்றம் அடைந்தவர்கள் போலீசில் புகார் கொடுத்தனர். வழக்கம்போல், போலீசாரால் முதல் தகவல் அறிக்கை பதியப்படவில்லை. புகார் கொடுத்தவர்கள் நீதிமன்றத்தை அணுகிப் புகாரை பதிய செய்ய உத்தரவு பெற்றனர். உத்தரவு பெற்ற பின்னும், லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்குகளை பதியாமல் ஒப்புக்கு சப்பாக சமரசம் செய்து கொள்ளும் வகையில், வழுக்குறைவான சட்டப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கைகள் அமைச்சரின் பெயரை விட்டுவிட்டு பதியப்பட்டன. எனவே மீண்டும் நீதிமன்றம் சென்று, கோடிகளைப் பெற்ற அமைச்சர் பெயரை விட்டுவிட்டு, கீழ்மட்ட நபர்கள் மீது மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டு செந்தில் பாலாஜியை போலீஸ் காப்பாற்றுகிறது என்று வாதிட்டனர். நீதிமன்றமும், கீழ் மட்டத்தில் விசாரிப்பதை விட்டுவிட்டு, லஞ்சப்பணம் சென்ற மேல் மட்டம் வரையிலும் விசாரணை நீள வேண்டும் என்று உத்தரவிட்டனர். அதன் பிறகு போலீசார் மாற்றப்பட்டு நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு புல விசாரணை தொடங்கியுள்ளது. இந்த விசாரணையின் போதும்தான், போக்குவரத்து கழகங்களில் செய்யப்பட்ட ஒவ்வொரு

பணியாளரும் அமைச்சர் செந்தில் பாலாஜியின் உத்தரவின் படி தான் நியமிக்கப்பட்டுள்ளதும் தெரியவந்தது.

அதாவது, நியமிக்கப்பட வேண்டியவர்கள் பெயர்களை, அமைச்சர் அலுவலகத்தில் இருந்து ஈமெயில் மூலம் அனுப்பப்பட்டு, அந்தப் பெயர்களுக்கு மட்டுமே பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ள விவரங்களை போலீசார் தமது புலன் விசாரணையில் கண்டுபிடித்தனர். மேலும் இந்தப் பணி நியமன ஊழல் எட்டு போக்குவரத்து கழகங்களிலும் நடைபெற்ற அனைத்து பணி நியமனங்களிலும் நடைபெற்றுள்ள விபரங்கள் தெரியவந்துள்ளன. எனவே போலீசார், எட்டு போக்குவரத்து கழகங்களிலும் நடைபெற்ற ஒவ்வொரு பணிக்கான நியமனங்களையும் ஆய்வு செய்ய எண்ணி முதற்கட்டமாக 13 காலியிடங்களை நிரப்ப நியமிக்கப்பட்ட 33 இளநிலை பொறியாளர்கள் நியமனத்தை புலன் விசாரணை செய்து லஞ்ச தடுப்பு சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டங்களின் கீழ் வழக்கு பதிவு செய்ய நீதிமன்றத்திற்கு தெளிவான அறிக்கையை சமர்ப்பித்தனர். இந்த மெத்தனமான போலீஸ் நிர்வாகம் அதிமுக அரசில்தான் நடைபெற்றது.

காலத்தின் விளைவு அதிமுக அரசு தோற்று திமுக அரசு பதவி ஏற்றது. மே 2021 இல் திமுக அரசு பதவி ஏற்றதும் திரு செந்தில் பாலாஜி அவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அவர் பதவியேற்ற உடன் அவர் வழக்குகளை விசாரித்து வந்த அனைத்து போலீசாரும் இடமாற்றம் செய்யப்பட்டு அன்னாரின் கைக்கூலிகள் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டனர். உடனடியாக, இந்த வழக்குகளை ரத்து செய்ய, புகார் கொடுத்தவர்களே நீதிமன்றம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். புகார் தாரர்கள் அனைவரும், "நாங்கள் லஞ்சம் கொடுத்த பணத்தை திரும்ப பெற்று விட்டோம் எனவே இவ்வழக்கை தொடரை எங்களுக்கு விருப்பமில்லை" என்று கூறி லஞ்சம் கொடுத்தவர்களும் லஞ்சம் பெற்ற போக்குவரத்துக் கழக அதிகாரிகளும் சமரச மனுக்களை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும் இந்த அதிகார துஷ்பிரயோகத்தின் மூலம் பெறப்பட்ட சமரச மனுக்களை அப்படியே ஏற்றுக் கொண்டு ஒரு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்து அது தினசரிகளில் செந்தில் பாலாஜியின் போட்டோவுடன் அவர் நிரபராதி என்று செய்தி வெளியானது.

இதைப் பார்த்து அதிர்ச்சியுற்ற நம் இயக்க உறுப்பினர்கள் இந்த கொடுமையை எதிர்த்து நம் இயக்கம் போராடவில்லையேல், இயக்கம் நடத்துவதே அர்த்தமற்றது ஆகிறது என்று மன வேதனைப்பட்டனர். எனவேதான் நமது செயற்குழு இந்த வழக்கில் நாமும் தலையிட்டு இந்த அநீதியை துடைத்தெறிய வேண்டும் என்று முடிவு செய்து சட்ட போராட்டம் நடத்தி வருகிறோம். இதன் பால் உச்சநீதி மன்றம் வரை சென்று வழக்கு நடத்தி செந்தில் பாலாஜியின் வழக்கு ரத்து செய்யப்பட்டதை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது. ரத்து செய்ததோடு, சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இரு வழக்குகளிலும் லஞ்ச தடுப்பு சட்டத்தின் பிரிவுகளை இணைக்க வேண்டும் என்றும் நிலுவையில் உள்ள தடை ஆணையை ரத்து செய்ய ஆவண செய்ய வேண்டும் என்றும் போலீசாருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை புறந்தள்ளிவிட்டு, செந்தில் பாலாஜி மீதுள்ள வழக்குகளை மீள விசாரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் போலீசார் பிரமாண பத்திரங்களை தாக்கல் செய்தனர். இந்த போலீசாரின் அப்பட்டமான பொய் மனுக்களையும் ஏற்றுக்கொண்டு செந்தில் பாலாஜியின் மீதான நிலுவையில் உள்ள இரு வழக்குகளிலும் இது காறும் நடைபெற்ற புலன் விசாரணைகளை அடியோடு மொத்தமாக ரத்து செய்வதாகவும், இனி ஆரம்ப முதல் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்றும், புதியதாக சான்றாவணங்களை கண்டுபிடிக்க வேண்டும் என்றும் அதன் அடிப்படையிலேயே, குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் இருப்பின் அதன் அடிப்படையில் புலனாய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவின் மூலம் செந்தில் பாலாஜி வீடு மற்றும் அவரது பிற இடங்களில் ரெய்டு நடத்தி கைப்பற்றப்பட்ட கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்க், இமெயில் மற்றும் பிற முக்கியமான குற்றத்தை நிரூபிக்கும் சான்றாவணங்கள் புறக்கணிக்கப்பட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவை நீங்கலாக புதிதாக எந்த ஆவணங்களும் இல்லாத சூழ்நிலையில் புதிய ஆவணங்களைத் தேடி புலனாய்வு செய்ய உத்தரவு விட்டது உண்மையிலேயே சென்னை உயர் நீதிமன்றம் செய்த மாபெரும் தவறாகவே கருதுகிறோம். ஆக செந்தில் பாலாஜி அமைச்சர் ஆனவுடன் தமக்கு வேண்டிய அதிகாரிகளை நியமித்து தமது வழக்குகளின் சான்றாவங்களை அழித்து வழக்குகளை முற்றிலும் நீர்த்துப்போக செய்துவிட்டார். இது போன்ற ஒரு உத்தரவினை சென்னை உயர் நீதிமன்றத்திடம் பெற்றும் விட்டனர். இது ஊழலின் கோர முகத்தை காட்டுகிறது. இக்கொடுமையை எதிர்த்து நாம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம். இதில் சாதகமான அம்சம் யாதெனில், இந்த அநீதியை எதிர்க்க உச்ச நீதிமன்றத்தில் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்ய நம்மால் இயலாத நிலையில் இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களாக உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள், திருவாளர்கள்

பிரசாந்த் பூஷன் மற்றும் பிரணவ் சச்தேவா வழக்கறிஞர்கள் நமது வழக்கை ஒரு நயா பைசா செலவின்றி, fees எதுவும் பெறாமல், நடத்தி வருகின்றனர். அநீதியை எதிர்க்க நாம் முனைவோமானால் இறைவன் யார் மூலமாகவேனும் அதற்கு துணை நிற்பான் என்பதற்கு இதைவிட சாட்சியம் இல்லை. கலியுகத்தில் இவ்வாறு தான் இறைவனின் பங்கு இருக்கும் போல. நமது இந்தப் பணியில் நமது ஒவ்வொரு உறுப்பினரும் முழுமூச்சுடன் ஈடுபட்டால் ஒவ்வொரு ஊழல் எதிர்ப்புக்கும் யாரேனும் உதவி புரிவார்கள் ஊழலை ஒழிக்க ஏதுவாகும் என்று ஒரு நம்பிக்கை நமக்கு கிடைக்கிறது. எனவே நமது இயக்க உறுப்பினர்கள் எங்கு ஊழல் நடப்பினும் உரிய ஆதாரங்களைக் கொண்டு உரிய போராட்டம் நடத்துவோமானால் அதற்கான முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கண்டிப்பாக எங்கிருந்தேனும் நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை துளிர் விடுகிறது. எனவே நமது ஊழல் இயக்க எதிர்ப்பு பணி இன்னும் சிறப்பாக இருக்க நாம் ஒவ்வொருவரும் பயமின்றி துணிவோடு அர்ப்பணிப்போடு செயல்படுவோம் என்று உறுதி ஏற்போம்.

தொடர்ந்து போராடுவோம். நமது இலக்கை நோக்கி நமது பயணத்தை தொடர்வோம். நன்றி! வணக்கம்.

**ந. சுப்ரமனியன்**
**தலைவர்**

---

## 38 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள 1,835 ஊழல் வழக்குகள்

**1 Dec 2022 (தமிழ் முரசு)**



ஊழல் வழக்குகளை நீண்ட காலத்துக்கு நீதிமன்றங்களில் நிலுவையில் வைத்திருந்தால், ஊழலை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 38 ஆண்டுகளாக 1,635 ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அவை அனைத்தையும் விரைந்து விசாரிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

போக்குவரத்து துறையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பான வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றம் விசாரித்து வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போதே நீதிபதிகள் இவ்வாறு குறிப்பிட்டனர். தமிழகம் முழுவதும் கடந்த 1983 முதல் 2021ஆம் ஆண்டு வரை 1,635 ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக மாநில லஞ்ச ஒழிப்பு துறை அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இத்தகைய தாமதமானது ஊழல் வழக்கின் தன்மையை நீர்த்துப் போகச் செய்து விடும் என்றனர்.

மேலும், ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்துதப்பிக்க வழி வகுக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஊழல் வழக்குகளை விரைந்து விசாரிக்காவிட்டால் ஊழல் தடுப்பு சட்டத்தின் நோக்கத்தையே வீழ்த்திவிடும். எனவே அனைத்து ஊழல் வழக்குகளையும் விரைவாக முடிக்க வேண்டும்," என்றும் உயர் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

**இது தொடர்பாக தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாக தமிழக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

# ஊழல் இல்லாத இந்தியா

வே. கார்த்திகை ராஜன்
பொது செயாலாளர்

இந்தியா பல்வேறு நிலைகளில் ஊழல் பிரச்சனையை எதிர்கொள்கிறது. இந்தப் பிரச்சனை நம் நாட்டை உள்நாட்டில் தினறிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டில் விழும் ஊழலின் எதிர்மறையான விளைவுகளை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து, நமது நாட்டை ஊழலற்ற நாடாக மாற்ற நம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்ய வேண்டிய தருணம் இது. இந்திய அரசியல்வாதிகள் ஊழல்வாதிகள் என்று அடிக்கடி நம்மால் கூறப்படுகிறது. ஆனால் இந்த பகுதியில் மட்டும் ஊழல் இல்லை. எல்லா துறைகளிலும் ஊழல் இருக்கிறது, அது நம் நாட்டை சீரழித்து வருகிறது.

உயர்ந்த விழுமியங்கள், ஒழுக்கம் மற்றும் மரபுகளைக் கொண்ட நாடான இந்தியா, ஊழல் பிரச்சனையை எதிர்கொள்கிறது. நம் நாட்டில் உள்ள பல்வேறு கெட்ட பழக்கங்களில் இதுவும் ஒன்று, நம் நாடு போராடி வருகிறது. நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பும் பல்வேறு நிலைகளில் ஊழலை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது.

## இந்திய அரசு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்

இந்தியாவில் உள்ள அரசு மற்றும் அரசியல் கட்சிகள் ஊழல் நடவடிக்கைகளுக்கு பெயர் பெற்றவை. ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல், ஊழலை ஒழிக்க பாடுபட வேண்டும். அவர்கள் குடிமக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்; மற்றும் ஊழல் வழிகளில் வேலை செய்வதற்குப் பதிலாக அவர்களின் இலக்குகளை அடைய நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்ற அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

## இந்தியாவில் ஊழலுக்கான காரணங்கள்

நம் நாட்டில் ஊழல் அளவு மிக அதிகமாக உள்ளது. நாட்டின் அனைத்து துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. ஊழல் வழிகள் மற்றும் நியாயமற்ற வழிகள் பல பெரிய மற்றும் சிறிய பணிகளை நிறைவேற்ற அரசாங்க மற்றும் தனியார் துறை மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு ஒரு காரணம், மக்கள் கடினமாக உழைக்காமல் பெரிய பணத்தைப் பெற விரும்புகிறார்கள், ஆனால் இதுபோன்ற மோசமான நடைமுறைகளைப் பயன்படுத்தி நாம் எங்கே போகிறோம்? கண்டிப்பாக அழியும்! நாம் ஒவ்வொருவரும் எந்த விதமான ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. ஊழலற்ற இந்தியாவை உருவாக்குவதற்கான முதல் படியாக இது அமையும் இதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்த காரணங்களைப் பற்றிய சுருக்கமான பார்வை இங்கே:

1. **வேலை வாய்ப்புகள் இல்லாமை**

   சந்தையில் வேலை வாய்ப்புள்ள இளைஞர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது, இருப்பினும் இன்று பல இளைஞர்கள் எந்த வேலையும் இல்லாமல் சுற்றித் திரிகிறார்கள், மற்றவர்கள் தங்கள் தகுதிக்கு சமமாக இல்லாத வேலைகளை எடுக்கிறார்கள். இந்த மக்களிடையே உள்ள அதிருப்தியும், அதிகமாக சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசையும் அவர்களை ஊழல் முறைகளை பின்பற்ற வழிவகுக்கிறது.

2. **கடுமையான தண்டனை இல்லாதது**
   லஞ்சம் கொடுப்பது, வாங்குவது, வருமான வரி செலுத்தாதது, தொழில் நடத்த ஊழல் வழிகளை நாடுவது போன்ற ஊழல் முறைகளை நம் நாட்டு மக்கள் பின்பற்றுகின்றனர். மக்கள் நடமாட்டத்தை கண்காணிக்க கடுமையான சட்டம் இல்லை. மக்கள் பிடிபட்டாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவதில்லை. நாட்டில் ஊழல் அதிகமாக இருப்பதற்கு இதுதான் காரணம்.

3. **கல்வி இல்லாமை**
   படித்தவர்கள் நிறைந்த சமூகம் ஊழலைக் குறைக்கும். மக்கள் கல்வி கற்கவில்லை என்றால், அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நியாயமற்ற மற்றும் ஊழல் முறைகளைப் பயன்படுத்துவார்கள். நமது நாட்டின் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கல்வியின் முக்கியத்துவத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறார்கள், இது ஊழலை அதிகரிக்க வழிவகுக்கிறது.

4. **பேராசை மற்றும் போட்டி அதிகரிக்கும்**
பேராசை மற்றும் சந்தையில் அதிகரித்து வரும் போட்டி ஆகியவையும் ஊழலின் அதிகரிப்புக்குக் காரணம். இந்த நாட்களில் மக்கள் மிகவும் பேராசை கொண்டவர்களாக மாறிவிட்டனர். அவர்கள் தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களை விட அதிகமாக சம்பாதிக்க விரும்புகிறார்கள், இந்த வெறித்தனமான அவசரத்தில் அவர்கள் தங்கள் கனவுகளை நிறைவேற்ற ஊழல் முறைகளை பின்பற்றத் தயங்குவதில்லை.

5. **முன்முயற்சி இல்லாமை**
ஊழலற்ற நாட்டை மாற்ற அனைவரும் விரும்புகின்றனர், இந்த திசையில் அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்று விமர்சிக்கின்றனர். ஆனால், இந்தப் பிரச்சினையை நம் மட்டத்தில் நிறுத்தப் பார்க்கிறோமா? இல்லை, அது நாங்கள் அல்ல. நாம் அனைவரும் அறிந்தோ அறியாமலோ ஊழலைப் பிறப்பித்து வருகிறோம். இந்த தீமையை நாட்டிலிருந்து அகற்ற யாரும் முன்முயற்சி எடுத்து அணியாக செயல்பட தயாராக இல்லை.

6. **ஊழல் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும்**
ஊழலுக்கான காரணங்கள் அனைவருக்கும் தெரியும். பிரச்னைக்கான காரணத்தை கண்டறிந்ததும், பாதி வேலை அப்படியே முடிந்து விட்டதாக கூறப்படுகிறது. பிரச்சனையைப் பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக தீர்வுகளைத் தேடுவதற்கான நேரம் இது.

இந்தியாவை ஊழலற்ற நாடாக மாற்றும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும், ஏனெனில் இந்த பிரச்சனை இப்படியே தொடர்ந்தால் நம் நாடு முன்னேற முடியாது. ஊழலுக்கு வழிவகுக்கும் ஒவ்வொரு பிரச்சனையும் அதன் வேர்களுடன் அகற்றப்பட வேண்டும். அதேபோல, ஊழலற்ற இந்தியாவைக் கட்டியெழுப்ப ஒவ்வொரு அம்சத்திலும் பணி செய்யப்பட வேண்டும்.

**அரசியல் கட்சிகள் மற்றும் அமைச்சர்கள் தேர்வு**

இந்தியாவில் யார் வேண்டுமானாலும் தேர்தலில் நின்று சொந்த அரசியல் கட்சியை உருவாக்கலாம். தகுதி அளவுகோல் ஒரு நபரின் கல்வித் தகுதியைக் கொண்டிருக்கவில்லை. பள்ளிக்கு செல்லாத அமைச்சர்கள் உள்ளனர், அரசியல் அமைப்பு பற்றிய அவர்களின் அறிவு முற்றிலும் இல்லை. குற்றப் போக்குகளின் கடந்த காலப் பதிவைக் கொண்ட சில தலைவர்கள் உள்ளனர். இப்படிப்பட்டவர்களால் நாட்டைக் கட்டுப்படுத்தும்போது ஊழல் நிச்சயம் நடக்கும். குறைந்தபட்ச கல்வித் தகுதியை நிர்ணயிக்க வேண்டும்.

கல்வித் தகுதிகளை பூர்த்தி செய்து, நாணயமான வ்ழிகளில் சாதனை படைத்தவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும். தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு கடமைகளையும் பொறுப்புகளையும் கையாள பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட அல்லது படித்த ஒருவரால் மட்டுமே நிச்சயமாக நாட்டை சிறந்த முறையில் நடத்த முடியும். அனைவருக்கும் ஒரு செட் புரோட்டோகால் இருக்க வேண்டும், அமைச்சர்களின் செயல்பாடுகள் பின்பற்றப்படுகிறதா இல்லையா என்பதை உயர் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

ஊழலற்ற இந்தியாவை நாம் ஒவ்வொருவரும் விரும்பினாலும், இந்த முயற்சியில் பங்களிக்க யாரும் தயாராக இல்லை. ஊழலைக் குறைப்பதற்குப் பதிலாக, ஊழலை அதிகப்படுத்துகிறோம். இந்தத் தீய பழக்கத்திலிருந்து நம் நாட்டை விடுவிக்க நாம் ஒன்றுபட்டு நேர்மையைக் கொண்டுவர வேண்டும்.

**கல்வியை வியாபாரமாக்கக் கூடாது**

ஊழல் அதிகரித்து வருவதற்கு கல்வியின்மையும் ஒரு முக்கிய காரணம். படிக்காத வகுப்பைச் சேர்ந்த பலர் தங்கள் வாழ்வாதாரத்திற்காக சட்டவிரோத மற்றும் ஊழல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இலவசமாக தரமான கல்வி இந்தப் பிரச்சனையை பெருமளவு குறைக்க உதவும். நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்குச் சென்று கல்வி பெறுவதை உறுதி செய்வதற்கான கொள்கைகளை அரசு வகுக்க வேண்டும்.

**கடுமையாக தண்டிக்க வேண்டும்.**

லஞ்சம் வாங்குவது, கொடுப்பது, சட்டவிரோதமாக தொழிலை பெருக்குவது, கறுப்புப் பணத்தை சேகரிப்பது போன்ற ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஊழலை ஊக்குவிக்கும் அல்லது அபராதத்தைத் தவிர்க்கும் விஷயங்களைத்

தவிர்ப்பதற்குப் பதிலாக, சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் அதை நம் பொறுப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஊழலற்ற இந்தியாவை அமைப்பதில் ஊடகங்களின் பங்கு**

பல்வேறு துறைகளில் ஊழல் செய்பவர்களை அம்பலப்படுத்த ஊடகங்களும், அரசும் ஸ்டிங் ஆபரேஷன்களை நடத்த வேண்டும். இத்தகைய ஸ்டிங் ஆபரேஷன்கள் ஊழல்வாதிகளை அம்பலப்படுத்துவது மட்டுமல்லாமல், இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் மற்றவர்களையும் ஊக்கப்படுத்தாது.

**கேமராக்கள் மற்றும் ரெக்கார்டர்களை நிறுவவும்**

ஊழலைக் குறைக்கவும் தொழில்நுட்பம் உதவும். அரசு அலுவலகங்களிலும், சாலை சந்திப்புகளிலும், லஞ்சம் வாங்குவது, கொடுப்பது போன்ற வழக்குகள் அதிகம் உள்ள இடங்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும். கேமராக்கள் பொருத்த கடினமாக இருக்கும் இடங்களில் ரெக்கார்டர்களை நிறுவலாம். மக்கள் தங்களைச் சுற்றி நடக்கும் ஊழல் நடவடிக்கைகளைத் தங்கள் மொபைலில் பதிவுசெய்து அருகிலுள்ள காவல் நிலையத்தில் பகிர்ந்து கொள்ள முன்முயற்சி எடுக்கலாம்.

**நம்பிக்கையை உருவாக்க வேண்டும்**

இந்தியாவில் யார் மீதும் புகார் கொடுக்க காவல்துறையை அணுக மக்கள் பயப்படுகிறார்கள். போலீஸ் விசாரணைக்காக தங்களைக் கைது செய்து, சமூகத்தில் கெட்ட இமேஜை உருவாக்கலாம் என்ற அச்சத்தில், காவல் நிலையம் செல்வதைத் தவிர்க்க வேண்டும். காவல்துறையினருக்கு உதவ விரும்புபவர்கள் எந்தவித அசௌகரியத்தையும் சந்திக்காத வகையில் காவல் நிலைய நடைமுறைகள் இருக்க வேண்டும்.

இந்தியாவில் ஊழல் விகிதம் மிக அதிகமாக உள்ளது. மற்றவற்றுடன், ஊழல் நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வளரும் நாடுகளில் பெரும்பாலானவை இந்த சிக்கலை எதிர்கொள்கின்றன. இந்த நாடுகளில் உள்ள அரசாங்கமும் தனிநபர்களும் ஊழல் முறைகள் தங்களுக்கு ஓரளவு நன்மை பயக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியாது, ஆனால் உண்மையில் அது நாட்டின் வளர்ச்சியை முற்றிலுமாகத் தடுக்கிறது மற்றும் இறுதியில் அவர்களுக்கு மோசமானது.

---

***சவப் பொருளாதாரம்.* மற்றும்  *ஜீவப் பொருளாதாரம்.***

*நாம் சவப் பொருளாதாரத்திலிருந்து ஜீவப் பொருளாதாரத்திற்கு மாறினால், உலகம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சனைகள் தீரும். அதீத நுகர்வு, இயற்கை வளங்களைச் சுரண்டுதல், குறைந்த காலத்தில் அதிக லாபம் ஈட்டுதல் இவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பு தான் சவப் பொருளாதாரம்(death economy). அனைத்து உயிரினங்களின் நலனையும் கருத்தில் கொண்டு, சமத்துவமிக்க சமூகத்தை உருவாக்க உதவும் பொருளாதார கட்டமைப்பு ஜீவப் பொருளாதாரம்(life economy).*

*நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் சவப் பொருளாதரத்தை ஜீவப் பொருளாதாரமாக மாற்ற முடியும். இதற்கு நாம் ஒவ்வொருவரும் சில அடிப்படைக் கேள்விகளை கேட்டுக் கொள்ள வேண்டும்.*

*வாழ்க்கையில் நம்முடைய இலக்கு என்ன, எந்த விஷயம் நமக்கு மிகுந்த மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தரும் என்ற கேள்விகளை நாம் ஆழமாக கேட்டுக் கொள்வது அவசியம். நமக்கு விருப்பமான விஷயத்தை செய்வதன் மூலம் சவப் பொருளாதாரத்தை ஜீவ பொருளாதாரமாக மாற்ற முடியுமா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். மாற்ற முடியுமெனில், நாம் செயல்படுவதை எது தடுக்கிறது என்று கேட்டுக்கொள்ள வேண்டும். அந்தத் தடையை எதிர்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொரு தனி மனிதனும் தன்னைத்தானே கேட்டுக்கொள்வதன் வழியே ஒட்டு மொத்த மனிதகுலமே முன்னகர்ந்து செல்லும்.*

***Confessions of an economic Hitman* by**
***ஜான் பெர்க்கின்ஸ்***

# ஊழலில் வீழும் உலகம்

உலக நாடுகளின் ஓராண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ரூ. 258 லட்சம் கோடி ஊழலில் காணாமல் போய்விடுகிறது என்று ஐநாவின் அறிக்கை கூறுகிறது. இவற்றில் லஞ்சமாக மட்டுமே ரூ. 71 லட்சம் கோடி காணாமல் போகிறது.

உலக அளவில் நான்கில் ஒருவர் அரசு சேவைகளைப் பெறுவதற்கு லஞ்சம் கொடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது. மருத்துவரைப் பார்ப்பதற்கு, பள்ளியில் பிள்ளைகளுக்கு இடம் வாங்க, போலீசில் புகார் கொடுக்க, குற்றங்களிலிருந்து தப்பிக்க என ஏதோ ஒருவகையில் எல்லோரும் லஞ்சம் கொடுக்கிறோம்.

21ம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவாலாக ஊழல் பிரச்சினை இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள ஐநா, ஊழல், ஒரு சாமான்யனுக்குக் கிடைக்க வேண்டிய தரமான கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையெல்லாம் திருடி விடுகிறது என்று கூறுகிறது. பொருளாதாரம் பல மடங்கு உயர்ந்தாலும் ஏழை பணக்கார ஏற்றத் தாழ்வு அதைவிடப் பலமடங்கு அதிகரிக்க இதுவே காரணம் என்கிறது.

உலகின் சொத்துக்களில் 80 சதவீதம் வெறும் 20 சதவீதத்தினரிடம் குவிந்து கிடக்கிறது. இந்த அறிக்கையில் ஊழல் செய்வதில் காவல்துறையும், அரசியல்வாதிகளும் முன்னிலையில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆய்வில் எடுத்து கருத்துக் கணிப்புப்படி ஊழல் செய்வதில் இவர்களின் பங்களிப்பு தலா 36 சதவீதம். (ஊழல் செய்வதில் யாருக்கு எவ்வளவு பங்கு இருக்கிறது என்பதை அட்டவணையில் பார்க்கலாம்.).

ஆனாலும், லஞ்சம், கையாடல், பணமோசடி, வரி ஏய்ப்பு, குடும்ப அரசியல் என ஏதோ ஒரு வகையில் எல்லோரும் ஊழலில் பங்கெடுப்பதாக ஆகிவிட்டது என்றும் ஐநாவின் அறிக்கை கூறியுள்ளது.

இந்த ஊழல் பிரச்சினை உலகின் பணக்கார, ஏழை நாடுகள் என்ற எந்த வித்தியாசமும் இல்லாமல் பாதிக்கிறது என்கிறது ஐநா. இதனால், பொருளாதாரத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்கள் தான் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். ஊழலைச் செய்பவர்கள் பணக்காரர்களும், அதிகார வர்க்கத்தினரும், அரசியல்வாதிகளும்,தான். ஊழலில் பங்கெடுப்பவர்கள் பொருளாதாரத்தில் நடுத்தர நிலையில் இருப்பவர்கள்.

ஆனால், ஊழலால் பாதிக்கப்படுவது இவர்களைக் காட்டிலும், ஊழலில் பங்கெடுத்துக்கொண்டு தன்னையும் தன் சுற்றத்தாரையும் வளமாக வைத்துக்கொள்ளும் அளவுக்கு பொருளாதாரம் இல்லாத ஏழைகள் தான் கடைக்கோடி சாமான்யர்கள். இதற்கெல்லாம் முழு முதற்காரணமாக இருப்பது இன்றைய பணநாயகப் பொருளாதாரம்.



1980களுக்குப் பின்னர் உலக மயமாக்கல், தாராளமயமாக்கல் போன்ற பொருளாதார கொள்கைகள் தீவிரமடைந்ததால், உலகப்பொருளாதாரம் பணத்தை மையமாகக் கொண்டதாகவே மாறியது. லாபமும், வளர்ச்சியும் மட்டுமே தொழில்துறையின் நோக்கமாக இருந்தது. பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான போட்டி ஆட்சியாளர்களுக்கும், அதிகாரவர்க்கத்தினருக்கும் சாதகமாக மாறியது. அது ஒவ்வொரு நாட்டின் சமூக-பொருளாதார அம்சங்களைக் கூறுபோட்டு விற்க ஆரம்பித்தது.

### இந்தியாவும் ஊழலும்

இந்தியாவில் ஊழல் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள நாம் கால் நூற்றாண்டு பின்னோக்கிச் சொல்ல வேண்டும். 1991,

தாராளமயமாக்கலும், உலகமயமாக்கலும் தீவிரமடைந்த காலம். ஊழலின் ஆரம்பம். சுதந்திரத்துக்குப் பிறகு எங்குபார்த்தாலும் ஏழ்மை என்ற நிலையில் இருந்த இந்தியா 1991க்குப் பிறகு அபர்மிதமான வளர்ச்சியைக் கண்டது.

எனவேதான், 1947-1991 வரையிலான காலத்தை இருண்ட காலம் என்றும், 1991க்குப் பிறகுதான் இந்தியாவுக்குப் பொற்காலம் பிறந்தது என்றும் சொல்வார்கள். ஆனால், இந்தியா அதற்குப் பிறகு கண்ட வளர்ச்சிக்கு ஒரு பிரிவு மக்கள் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. 1991ல் இந்தியா தீவிர தனியார்மய கொள்கையை ஆதரித்தது.
அரசுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு, தனியார்களுக்குத் தாரை வார்க்கப்பட்டன. வெளிநாட்டு நிறுவனங்களும், உள்நாட்டு தனியார் நிறுவனங்களும் லாபகரமாகத் தொழிலை மேற்கொள்ள இந்தியா எனும் மிகப்பெரிய சந்தையை ஏற்படுத்திக் கொடுத்தது இந்திய அரசு. வர்த்தகம் தடையில்லாமல் நடக்க ஏற்றுமதி, இறக்குமதிகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அந்நிய நேரடி முதலீடுகள் உள்ளே வந்தன.

இதனால் பொருளாதாரம் வேகமாக வளர ஆரம்பித்தது. மற்றொரு புறம் நிலம், நீர், அலைக்கற்றை, கனிம வளங்கள் போன்றவற்றை கைப்பற்றுவதில் பெரு நிறுவனங்களுக்கிடையே நிலம், கச்சா பொருள்கள் தீவிரமான போட்டி உருவானது. இந்தப் போட்டியைக் காரணமாக வைத்து அரசின் சொத்துகளும், இயற்கை வளங்களும் சந்தை மதிப்பைவிடக் குறைவான விலைக்கு விற்கப்பட்டன.

இதனால் நியாயமாக அரசுக் கருவூலத்துக்கு வரவேண்டிய வருமானம், இவற்றுக்கெல்லாம் பின்னால் நடந்த லட்சக்கணக்கான கோடி ஊழலில், அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரவர்க்கத்தினரின் கொள்ளைப்புறத்துக்குத்தான் போனது.

**இந்தியாவின் 1 சதவீத பெரும்பணக்காரர்களிடம் இந்தியாவின் 58 சதவீதச் சொத்துகள் குவிந்துள்ளன. அடித்தட்டில் உள்ள 70 சதவீத மக்களிடம் வெறும் 7 சதவீத செல்வம் மட்டுமே இருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வு ஒருபக்கம் எனில், மற்றொரு பக்கம் அளவுக்கு மீறி வளங்கள் சுரண்டப்பட்டதால் மிகப்பெரிய இயற்கை பேரழிவுகளைச் சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது. நாட்டு வளங்களை வாரி வழங்கியதன் விளைவால், பல்வேறு வகையான வளங்கள் இன்று பற்றாக்குறையைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.**

வளங்களைப் பாதுகாத்த மலைகளும், காடுகளும் இன்று காணாமல் போயிருக்கின்றன. அதனோடு சேர்த்து பல்வேறு பழங்குடி இன மக்களையும் சிதைத்திருக்கிறது. இந்தப் பணநாயகப் பொருளாதாரத்தில் உள்ள ஆதாயத்தைப் பெற்று ருசி கண்ட அரசியல்வாதிகளும், தொழிலதிபர்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவர்களாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகளே தொழிலதிபர்களாக இருக்கிறார்கள். தொழிலதிபர்கள் அரசியலில் இறங்குகிறார்கள்.

இதனால், இவர்களின் நோக்கம் என்னவென்று வேறுபடுத்திப் பார்க்க முடியாமல் மக்கள் குழப்பமடைகிறார்கள். வேகமாக வளரும் பொருளாதாரம் என்ற அலங்கார வார்த்தையின் மீது கட்டியெழுப்பப்படும் போலியான நம்பிக்கை உடையும்போது இந்தியா எதிர்கொள்ளப் போகும் பாதிப்புகள் என்னவாக இருக்கும் என்பதை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

**oozhal-statsjpg100**

***- saravanan.j@thehindutamil.co.in***

---

## ***"துக்ளக்' இதழில் (1976), "சோ' எழுதியது:***

என் சித்தப்பா தென்னிந்திய ரயில்வேயில் ஓர் உயர்ந்த பதவியில் இருந்தார். அவர் விவரித்த நிகழ்ச்சி இது: சென்னையில், ரிசர்வ் வங்கி கட்டடத்தின் எதிரில், சுரங்கப் பாதை கட்டியிருக்கிறார்களே, அது பற்றிய செய்தி இது.

அந்த, "சப்வே' கட்டுவதன் செலவின் ஒரு பகுதியை மத்திய அரசும், ஒரு பகுதியை மாநில அரசும் ஏற்க வேண்டும் என்று ஏற்பாடு. அந்த, "சப்வே'யை எப்படி கட்டுவது, அதன் செலவுகள் என்ன, மத்திய, மாநில அரசுகள் அதை எப்படி பங்கீடு செய்து கொள்வது, "சப்வே' கட்டுவதில் என்ன விதமான இன்னல்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கக் கூடும், அவற்றை எப்படி தவிர்ப்பது போன்ற பல பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பதற்காக, சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில், மத்திய அரசின் சார்பாக, ரயில்வே அமைச்சர் கலந்து கொண்டார். தமிழக அரசின் சார்பில் காமராஜர் கலந்து கொண்டார். மத்திய - மாநில அதிகாரிகள் பலரும் கலந்து

கொண்டனர். "சப்வே' திட்டத்தின், "டெக்னிக்கல்' விவரங்களை எடுத்துச் சொல்வது என் சித்தப்பாவின் பொறுப்பாகிறது.

அவர் பேச ஆரம்பித்தார். காமராஜருக்கு ஆங்கிலம், புரியுமோ, புரியாதோ என்ற சந்தேகத்தில் அவர் தமிழில் பேச ஆரம்பித்து, "டெக்னிக்கல்' விவரங்களைத் தமிழில் சரியாக விளக்க முடியாமல் திணற ஆரம்பித்தார்.

அவரைப் பார்த்து, "எனக்கு புரியுமோ, புரியாதோன்னு தானே தமிழில் பேச முயற்சி பண்றீங்க? பரவாயில்லை. இங்கிலீஷிலேயே பேசுங்க. எங்கேயாவது ஒண்ணு, ரெண்டு பாயின்ட் புரியலேன்னா, நான் உங்களைக் கேட்டுக்கிறேன்...' என்று கூறியிருக்கிறார் காமராஜர். அதன் பிறகு என்னுடைய சித்தப்பா, "சப்வே' திட்டத்தை விவரித்துள்ளார். ஏதோ ஓரிடத்தில் அவரது பேச்சை நிறுத்தி, விளக்கம் கேட்டிருக்கிறார் காமராஜர். இதன் பிறகு விவாதம் ஆரம்பித்திருக்கிறது. மத்திய அரசின் பிரதிநிதியாக வந்திருந்த மந்திரி, "இந்த, "சப்வே' கட்டுவதற்கு செலவு அதிகமாகும். எனவே, இதை இப்போது கட்ட முடியாது...' என்று பேசியிருக்கிறார். காமராஜருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. எழுந்தார்.

மத்திய மந்திரியை வெறித்துப் பார்த்து, "உட்காருய்யா; கட்ட முடியாதுன்னு சொல்லவா கான்பிரன்ஸ் போட்டோம்? எப்படி கட்டி முடிக்கிறதுன்னு தீர்மானம் செய்யத் தான் இந்த மீட்டிங்; ஏன் கட்ட முடியாதுன்னு காரணம் காட்டற மீட்டிங் இல்லை இது. "முடியாது, முடியாது'ன்னு சொல்லவா மந்திரியானீங்க, நீங்க? மந்திரின்னா, எப்படி செய்து முடிக்க முடியும்ன்னு வழி தேடறவன்; முடியாதுன்னு சொல்றவன் இல்லை.

"முடியாதுன்னு சொல்லவா டில்லியிலேருந்து இங்கே வந்தீங்க? அங்கேயிருந்தே சொல்லியிருக்கலாமே! முடியாதாம், முடியாது! இதுக்கா ஜனங்க ஓட்டுப் போட்டாங்க. நீ பேசாம உட்காரு; நான் பிரைம் மினிஸ்ட்டர்கிட்டே பேசிக்கிறேன்; "சப்வே' கட்டறோம்; அதான் முடிவு. எப்படின்னு டிஸ்கஸ் பண்ணி, விவரங்களை எடுத்துக்கிட்டு என்னை வந்து பாருங்க...' என்று கூறிச் சென்றார் காமராஜர். "சப்வே' கட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி அறிந்த நான், காமராஜரின் செயல் ஆர்வத்தைக் கண்டு வியந்தேன்.

- அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று நினைத்துப் பேச ஆரம்பித்த அதிகாரியைக் கோபிக்கவில்லை. அவருக்கு நம்பிக்கை அளித்து, பேச ஊக்குவித்தார் - பெருந்தன்மை.
- தனக்குப் புரியாத இடத்தில் புரிந்தது போல நடிக்கவில்லை. அர்த்தமும், விளக்கமும் கேட்டுப் புரிந்து கொண்டிருக்கிறார் - போலித்தனம் கலக்காத எளிமை.
- முட்டுக்கட்டை போட முனைந்த மத்திய மந்திரியைத் தூக்கி எறிந்து பேசியிருக்கிறார் செயல் ஆர்வம் அற்றவர்கள் மீது பீறிட்டெழும் கோபம்.
- "சப்வே கட்டுகிறோம். தீர்மானம் செய்து திட்டங்களை முடித்து வைக்கத்தான் ஜனங்க ஓட்டுப் போட்டிருக்கின்றனர்!' என்று ஆவேசமாகப் பேசியிருக்கிறார் - மக்களுக்குப் பயன்படும் திட்டங்களை நிறைவேற்றுவதில் துடிப்பு.
- "பிரைம் மினிஸ்டரிடம் நான் பேசிக்கிறேன்!' என்று கூறியிருக்கிறார் - தன்னம்பிக்கை, அரசியல் செல்வாக்கு.
- "சப்வே' கட்டி முடிக்கப்பட்டது - சாதனை.

இப்படி இந்த ஒரு நிகழ்ச்சியில் அவரது பல குணாதிசயங்கள், பல கோணங்களில் வெளிப்பட்டு, அவர் எவ்வளவு மதிப்புக்குரியவர் என்று நினைத்துப் பார்த்து உணர்ந்து கொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தான் என்பது தான் முக்கியம். காமராஜர் வாழ்ந்த விதத்தை ஆழ்ந்து நினைத்துப் பார்க்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# சட்டமும் நீதியும் சமானியனைத் தான் தண்டிக்குமா?

***- சாவித்திரி கண்ணன்***

January 4, 2023

இப்படியெல்லாம் கூட நடக்குமா?
சட்டமும், நீதியும், ஆட்சி அதிகாரமும் செல்வாக்கான வர்களுக்கு சேவை செய்வதற்கான கருவிகளா? பணக்காரர்களின் மோசடிகளுக்கும், பித்தலாட்டத்திற்கும் தண்டனைஎன்பதே கிடையாதா?

என நம்மை கொதிக்க வைக்கும் நிகழ்வுகளை கோர்வையாக பார்ப்போம். இந்தியாவில் ஆட்சியாளர்களும், தொழிலதிபர்களுமாக சேர்ந்து அதிகமாக ஏமாற்றுவது விவசாயிகளைத் தான்! இயற்கையையும், தங்கள் உழைப்பையும் மட்டுமே சார்ந்து வாழ்ந்த விவசாயிகளை தங்கள் நோக்கத்திற்கு ஏற்ற பயிர்களை 'சாகுபடி செய்யும்படி' வலியுறுத்துவதும் இவர்கள் தான்! பின்பு கூட்டாக மோசடி செய்து 'விவசாயிகளை சாகும்படி செய்பவர்களும்' இவர்கள் தான்!



அதற்கு சரியான உதாரணம் கரும்பு விவசாயிகள்! முன்பெல்லாம் கரும்பு என்பது அதிக விவசாயிகள் பயிரிடும் பயிர் அல்ல! இனிப்பு பயன்பாட்டுக்கு நாம் அறுபதாண்டுகளுக்கு முன்பு வரையிலும் பனைவெல்லத்தைத் தான் பயன்படுத்தி வந்தோம். அது மிகவும் சுவையானது மட்டுமல்ல, மிக ஆரோக்கியமானதும் கூட! ஆனால், பனை வெல்லத்திற்கு மாற்றாக கரும்பில் இருந்து கிடைக்கும் சீனியை மக்கள் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டது.

அதனால், கரும்பை பயிரிடச் சொல்லி அரசாங்கம் வற்புறுத்தியது! அப்படி பயிரிடும் கரும்பை பக்கத்தில் உள்ள சர்க்கரை ஆலையில் சேர்க்கும்படியும் அரசாங்கம் நிர்பந்தித்தது. அப்படி உற்பத்தியாகும் சர்க்கரையை நியாய விலைக் கடைகள் மூலமாக கொடுத்து சர்க்கரையை பயன்படுத்தவும் மக்களை பழக்கப்படுத்தியது. பிறகு அரசு ஆலைகள், கூட்டுறவு ஆலைகள் தவிர்த்து தனியார் ஆலைகளையும் களத்தில் இறக்கியது! இதற்கு பின்னணியில் ஒரு முக்கியமான நோக்கம் இருந்தது! அது தான் கரும்பு சர்க்கரையில் இருந்து கிடைக்கும் மோலாசஸ்! சர்க்கரை ஆலைகள் கரும்பில் இருந்து கிடைக்கும் சர்க்கரைக்கான பணத்தை மட்டுமே விவசயிகளுக்கு தருகின்றன! அதன் சக்கையான மோலாசஸ் மூலமாக அபரிமிதமாக கிடைக்கும் பணத்தின் சிறுபகுதியை கூட விவசாயிகளுக்கு தருவதில்லை!

இந்த மோலாசஸைக் கொண்டு தான் மது உற்பத்தியாளர்கள் அயல் நாட்டு வகை மதுவை தயாரிக்கிறார்கள்! மதுவைத் தயாரிப்பவர்கள் அரசியல்வாதிகள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அயல் நாட்டு மதுவை மக்கள் பழக வேண்டும் என்றால், அவர்கள் பனங் கள்ளை தடுக்க வேண்டும் என்பதால், கள்ளுக்கு தடையும் போட்டனர். இதனால், பல லட்சம் பனை விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாயினர்.

தமிழகம் முழுக்க பல்லாயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிட விவசாயிகளுக்கு நெருக்கடி தரப்பட்டது. சர்க்கரை ஆலைகளும் செல்வாக்கானவர்களாலேயே தொடங்கப்பட்டது! இவர்களுக்கு அரசாங்கத்தின் அனைத்துவித அனுசரணைகளும் கிடைத்தன! அதனால், கரும்பை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்தால் உடனே பணம் தரத் தேவையில்லை என்பது நடைமுறையானது. பின்பு சற்று காலம் தாழ்த்தலாம் என்பது நடைமுறையானது! பிறகு எவ்வளவு வேண்டுமானாலும் காலம் தாழ்த்தலாம் என்பதையும் அரசாங்கம் அனுமதித்தது. தற்போதோ கொள்முதல் செய்த கரும்புக்கு பணம் தராமல் மோசடி செய்வதும் தவறில்லை என்ற அளவுக்கு வந்து நிற்கிறது! அதைத் தான் ஆரூரான் சர்க்கரை ஆலையின் அசகாய மோசடிகள் நம் நெற்றிப் பொட்டில் அறைந்தது போல உணர்த்துகின்றன!

ஆரூரான் சர்க்கரை ஆலைகள் தஞ்சை மாவட்டத்திலும், கடலூர் மாவட்டத்திலுமாக நான்கு உள்ளன! இவற்றுக்கு சுமார் 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு விநியோகம் செய்து வந்தனர். இந்த விவசாயிகளுக்கு 2016 முதல் கரும்புக்கான பல கோடித் தொகையைத் தராமல் இழுத்தடித்தது இந்த நிர்வாகம். இத்துடன் தீடீரென்று உங்க பாக்கியைத் தருகிறோம். இந்த பாரத்தில் கையெழுத்து போட்டுத் தாங்க எனக் கேட்டு தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பில் 360 கோடியும் கடலூர் மாவட்ட விவசாயிகள் சார்பில் 90 கோடியும் அவர்களுக்கே தெரியாமல் அவர்களின் பெயரில் வங்கியில் கடன் வாங்கியுள்ளது இந்த நிர்வாகம். இந்த மோசடிக்கு வங்கி அதிகாரிகளும் துணை போய் உள்ளனர்! இந்த கடனுக்கு வட்டியையும், அசலையும் சேர்த்துக் கட்டும்படி விவசாயிகளுக்கு நெருக்கடி தந்து கொண்டுள்ளது வங்கி நிர்வாகம்!

கொதித்து எழுந்த விவசாயிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். திருமண்டகுடி ஆரூரான் சர்க்கரை ஆலை, சித்தூர் ஆரூரான் சர்க்கரை ஆலை ஆகிய இரண்டு ஆலைக ளின் பெயரில் அந்நிர்வாகம் வங்கிகளில் ரூ.1454.58 கோடி கடன் வாங்கியிருந்த இந்த ஆலை, கடந்த சில ஆண்டுகளாக செயல்படாமல் தன் செயல்பாடுகளை நிறுத்தி வைத்து திவாகிவிட்டதாக அறிவித்துவிட்டது.

இந்த ஆலைக்குச் சொந்தமான சொத்துக்கள் சுமார் ஆயிரம் கோடிக்கு நிலமாகவும், தொழிற்சாலையாகவும் உள்ள நிலையில் அதைக் கைப்பற்றி வங்கிக் க்டனையும், விவசாயிகளுக்கான கடனையும் அடைப்பது தானே ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை. அப்படித் தானே நீதிமன்றமும் தீர்ப்பளித்து வழிகாட்டி இருக்க வேண்டும்.

ஆனால், நடந்தவை எல்லாம் பார்த்தால், நாம் சட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதாக நம்பப்படும் ஜனநாயக நாட்டில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் தான் வருகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் காவல்துறைக்கும், கலெக்டருக்கும், முதல்வருக்கும் பல புகார் கடிதங்களை அனுப்பினர்! பல கட்டப் போராட்டங்களை நடத்தினர். அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்தும் முறையிட்டனர். நியாயப்படி மோசடி செய்த தனியார் சர்க்கரை ஆலை மீது கடும் நடவடிக்கை எடுத்து , மோசடிப் புகாரில் அவர்களை சிறைக்குள் தள்ளி இருக்க வேண்டும். அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து விவசாயிகளுக்கும், வங்கிகளுக்கும் தர வேண்டிய கடன் தொகையை தந்திருக்க வேண்டும்.

**அதிரடி கட்டப் பஞ்சாயத்து;**

ஆனால். இவை எதுவுமே நடக்கவில்லை.ஏதோ மறைமுக ஒப்பந்தம் நடந்ததோ என்னவோ..? எடப்பாடி அரசு ஆரூரான் ஆலைகள் , தேசிய கம்பெனிச் சட்டங்கள் தீர்ப்பாயத்தில் முறையிட அன்று அதிமுக அரசு அனுமதித்துவிட்டது. இந்த தீர்ப்பாயம் என்பது ஒரு மனசாட்சியில்லாத கட்டப் பஞ்சாயத்து அமைப்பாக செயல்பட்டு வருகிறது என்பதற்கு இந்த விவகாரத்தில் நடந்தவற்றைக் கொண்டு யாருமே எளிதில் உணரலாம்!

ஆரூரான் சர்க்கரை ஆலை வங்கிகளுக்கு தர வேண்டிய 1,454.58 கோடி கடனில் 85 கோடி ரூபாயை மட்டும் கொடுத்தால் போதும். அதையும் ஐந்து ஆண்டு களில் ஏழு தவணைகளாக செலுத்தினால் போதும் என, தேசிய கம்பெனிச் சட்டங்கள் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது! இந்த வகையில் வாங்கிய வங்கிக் கடன்களில் 1369.58 கோடி ரூபாயை

தள்ளுபடி செய்துவிட்டது! ஏன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை! இந்த ஆலை முதலாளிகள் இது வரை சம்பாத்தித்து சேர்த்த பல நூறு கோடிகள் என்னவாயிற்று? அவர்களின் பல சொத்துக்களை ஏன் பறிமுதல் செய்யவில்லை.. போன்ற எந்தக் கேள்விக்கும் விடை இல்லை.

இது போன்ற சூழல்களில், 'விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்' என்று நீதிமன்றம் ஏற்கனவே கூறிய போதும், 'விவசாயிகளின் கரும்பு பண பாக்கி முழுவதையும் தர வேண்டியதில்லை 45 கோடி ரூபாயை ஓராண்டில் ஐந்து தவணைகளில் கொடுத்தால் போதும்' என்று தீர்ப்பாயம் கட்ட பஞ்சாயத்து செய்துள்ளது.

மேலும், விவசாயிகள் வயிற்றில் மட்டும் அடிக்கவில்லை! கரும்பு ஏற்றி வந்த வாகனங்களுக்கு தர வேண்டிய வாடகை பாக்கி ரூ.47.61 லட்சத்தில் 48 ஆயிரம் மட்டும் தந்தால் போதும் என்றும் கூறியுள்ளது. தொழிலாளர்கள், ஊழியர்கள் சம்பள பாக்கியில் 18.74 கோடி ரூபாயை தள்ளுபடி செய்துவிட்டு, 3.71 கோடி ரூபாயை மட்டுமே கொடுத்தால் போதும் எனக் கூறியுள்ளது!

'விவசாயிகளுக்குத் தர வேண்டிய கரும்பு பண பாக்கிக்கு 15 சதவீதம் வட்டியுடன் வழங்கிட வேண்டும்' என்று கரும்பு கட்டுப்பாடு சட்டம் உள்ள நிலையில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கூட முழுமையாக தராமல், அதிலும் மோசடியை அரங்கேற்றி உள்ளது, தேசிய கம்பெனி சட்டங்கள் தீர்ப்பாயம்! இது உண்மையில் சட்டப் பஞ்சாயத்து தீர்ப்பாயமாகத் தெரியவில்லை. கட்டப் பஞ்சாயத்து தீர்ப்பாயமாகத் தான் தெரிகிறது.

**திமுக ஆட்சியில் இன்னும் மோசடி!**

தேர்தல் நேரத்தில் அரூரான் சர்க்கரை ஆலை மீது நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் கடன்பாக்கி தீர்த்து வைக்கப்படும் என திமுக தலைவர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்! ஆனால், 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் எதுவுமே நடக்கவில்லை என்பது மட்டுமல்ல, இருக்கும் சூழல்களை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் ஆதாயம் பார்த்து வருவதாகத் தான் தெரிகிறது!

**அடிமாட்டு ரேட்டுக்கு ஏலம்;**

விவசாயிகளுக்கு கரும்பு பாக்கி தீர்க்கப்படாத நிலையில் ஆரூரான் சர்க்கரை ஆலைகளுக்கு சொந்தமாக 750 ஏக்கர் நிலம், இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகள், டிஸ்டிலெரி நிறுவனங்கள், மின்சாரம் உற்பத்திக்கான இணைமின் நிலையங்கள் கொண்ட ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ள நிலையில், வெறும் 145 கோடி ரூபாய்க்கு இந்த ஆலை ஏலத்திற்கு தரப்பட்டு உள்ளதானது ஒரு பெரும் மர்மமாக உள்ளது! அப்படி ஏலம் எடுத்தது முதலமைச்சர் குடும்ப உறுப்பினர் ஒருவரின் பினாமி நிறுவனமாகப் பார்க்கப்படும் கால்ஸ் டிஸ்லரிஸ் பிரைவேட் லிமிடெட் என்கிறார்கள்!

கோடிக் கோடியாக மதுபான உற்பத்தியில் சம்பாதிக்கும் இந்த மதுபான ஆலைகள் அதற்கு முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றான மோலாசஸ் தரும் விவசாயிகளுக்கு எதுவுமே தராமல் ஏமாற்றுவதற்கு என்று தான் முற்றுபுள்ளி வைக்கபடுமோ?

**காந்தி தேசத்தில் விவசாயிகள், தொழிலாளிகளின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொண்டுள்ளது என்பதே உண்மை!**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352
திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142

E- Mail : acmchennai2001@yahoo.co.in
Website: anticorruptionchennai.com

# பட்டா தொடர்பான அரிய தகவல்கள்

பட்டா வேண்டி பொதுமக்கள் மாதக்கணக்கில் தாசில்தார் அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர். உட்பிரிவு செய்து தர வேண்டிய இனங்களில் 30 நாட்களிலும், உட்பிரிவு செய்ய தேவைப்படாத இனங்களில் 15 நாட்களிலும் பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டும் என தமிழக அரசு 8.7.2011 ம் தேதியிட்ட அரசாணை எண். 210, வருவாய் (நி. அ. 1(1))துறை - ல் கூறியுள்ளது.

அதேபோல் UDR பட்டாவில் ஏற்படும் தவறுகளை சரி செய்வதற்காக தமிழக அரசு 17.8.2004ம் தேதியில் அரசாணை எண். 385, வருவாய் (பொது - 3) துறை என்ற அரசாணையை பிறப்பித்துள்ளது.

**பட்டா மாற்றம்:** பட்டா மாறுதல்கள் வருவாய் நிலை ஆணை எண் 31 ன்படி மூன்று வகையாக செய்யப்படுகிறது.

1. நிலச் சொந்தக்காரர்கள் தாமே மேற்கொள்ளும் நடவடிக்கை (உரிமையை தாமே மாற்றுவது)
2. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலோ அல்லது வருவாய்த்துறையினர் மேற்கொள்ளும் விற்பனையின் மூலமான நடவடிக்கை (கட்டாய உரிமை மாற்றம்)
3. ஒருவருக்கு பின் ஒருவர் என்ற வாரிசுரிமை மூலமான அடிப்படையில் (வாரிசுரிமை மாற்றம்)

தமிழ்நாட்டில் பொதுமக்கள் பட்டா பெறுவதற்கும், பட்டா மாற்றம் செய்வதற்கும் தமிழக அரசு சட்டங்களையும், விதிமுறைகளையும் உருவாக்கியுள்ளது. அதில் சில முக்கியமான பகுதிகளை நாம் அறிந்து கொண்டால் பட்டா பெறுவதும், பட்டா மாற்றம் செய்வதும் எளிதாகிவிடும்.

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டாப்பதிவு புத்தக சட்டம் :**

- பிரிவு 3(1) - தாசில்தார் ஒவ்வொரு நில உடமையாளருக்கும் அவர் சொந்தமாக வைத்திருக்கும் நிலத்தை பொருத்து அவர் விண்ணப்பத்தின் பேரில் பட்டா பதிவு புத்தகம் ஒன்றை வழங்க வேண்டும்
- பிரிவு 3(7) - தாசில்தார் பட்டா மாற்றம் செய்வதற்கு முன் நிலத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு நியாயமானதொரு வாய்ப்பினை கொடுக்க வேண்டும்
- பிரிவு 3(9) - பட்டா பதிவு புத்தகத்தில் அடங்கியுள்ள பதிவுகள், விவரங்கள் ஆகியவற்றுக்காக ஒவ்வொரு தாசில்தார் அலுவலகத்திலும் பட்டா பதிவு புத்தக பதிவேடு பராமரிக்கப்பட்டு வர வேண்டும்.
- பிரிவு 3(10) - உரிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் நில உடமையாளருக்கு பட்டா பதிவு புத்தகம் வழங்கப்பட வேண்டும்.
- பிரிவு 10 - பட்டாவில் மாற்றம் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் முதலில் மனுவை தாசில்தாரிடம் தான் கொடுக்க வேண்டும். தாசில்தாரே முதன்மை அதிகாரி ஆவார்.
- பிரிவு 12 - தாசில்தார் உத்தரவின் மீது வருவாய் கோட்டாட்சியரிடம் முதல் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்
- பிரிவு 13 - வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

**1987ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா விவரக்குறிப்பு புத்தக விதிகள்:**

- விதி 3(1) - தாசில்தார் சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களை பொருத்தமட்டில் ஒவ்வொரு உரிமையாளருக்கும், இந்த சட்டத்தின் கீழ் பட்டா விவரக்குறிப்பு புத்தகம் வழங்கப்படவுள்ளது என அறிவிப்பு வெளியிட்டு சம்பந்தப்பட்ட கிராமத்தில் தண்டோரா போட்டு அறிவிக்க வேண்டும்.
- விதி 7 - பட்டா உரிமை புத்தகங்களுக்கான கட்டணம் ரூ. 20 /- ஆகும்.
- விதி 13 - இந்த சட்டத்தின் கீழ் பட்டா பதிவு புத்தகத்தில் யாருடைய உரிமைகள் அல்லது பற்றுகள் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதோ அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நபர் தாசில்தார் கேட்டுக் கொள்வதன் பேரில் தாசில்தாரின் ஆய்வுக்காக,

இச்சட்டத்தின் யாதொரு நோக்கத்திற்காக விவரங்களையும், ஆவணங்களையும் 15 நாள் கால அவகாசத்திற்குள் தாசில்தாருக்கு அளிக்க வேண்டும்.

- விதி 14 - இச்சட்டத்தின் கீழ் தாசில்தார் பிறப்பித்துள்ள உத்தரவுக்கு எதிராக 30 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியரிடம் முதல் மேல்முறையீடு செய்து கொள்ள வேண்டும்.
- விதி 15(1) - தாசில்தார் அல்லது வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை திருத்தியமைக்க வேண்டும் என்று கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்து கொள்ள வேண்டும்.
- விதி 15(2) - மேற்சொன்ன கால அளவிற்குள் அந்த மனுவை, மனுதாரர் தாக்கல் செய்ய முடியாமல் போனதற்கு நியாயமான, போதுமான காரணம் உள்ளது என்று மாவட்ட வருவாய் அலுவலர் கருதினால் விதி 15(1) ல் கூறப்பட்டுள்ள கால அவகாசம் முடிவடைந்த பின்னரும் உத்தரவை திருத்தியமைக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்றுக்கொள்ளலாம்

**ஆட்சேபனைகளை எப்படி தாக்கல் செய்ய வேண்டும்?**

1. தாசில்தாரின் பட்டா மாற்றம் இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுப்புகள் 14 மற்றும் 21ல் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது.
2. இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுப்புகள் 14 மற்றும் 21 ல் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் படி பட்டா மாற்றம் செய்வதற்கு முன் ஏற்கனவே கூட்டுப்பட்டாவில் உள்ள எனக்கு நீதிக்குட்பட்டு அறிவிப்பு கொடுக்காமலும், வாய்ப்பு அளிக்காமலும் என் தரப்பு வாதத்தை கேட்காமலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி தவறாகும்.
3. இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுப்பு 375 ன்படி தாசில்தார் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றை மதித்து நடக்கவில்லை.
4. வருவாய் நிலை ஆணை எண் 31 ஐ பின்பற்றி பட்டா மாற்றம் செய்யப்படவில்லை.
5. தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு பட்டா விவரக்குறிப்பு புத்தக விதிகள் 1987 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளை தாசில்தார் கடைபிடிக்கவில்லை.
6. தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983 ன் பிரிவு 3(7) ன்படி நிலத்தில் அக்கறை கொண்டுள்ள எனக்கு முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்படவில்லை. அறிவிப்பு ஏதும் கொடுக்கப்படவில்லை.
7. தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983 ன் பிரிவு 7 ல் கூறப்பட்டுள்ள நடைமுறைகளை தாசில்தார் பின்பற்றவில்லை.
8. தமிழ்நாடு பட்டா விவரக்குறிப்பு புத்தக விதிகள் 1987 ன் விதி 3 ன்படி சம்பந்தப்பட்ட கிராமத்தில் பட்டா மாற்றம் குறித்து அறிவிப்பு செய்யப்பட்டு தண்டோரா போடப்படவில்லை
9. VAO வருவாய் நிலை ஆணை மற்றும் கிராம நிர்வாக நடைமுறை நூல் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளை மீறி சட்ட விரோதமாக பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்துள்ளார்.
10. இயற்கை நீதிக்கு புறம்பாகவும், சட்ட விரோதமாகவும் பட்டா மாற்றம் தாசில்தாரரால் செய்யப்பட்டுள்ளது.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## செயற்குழுக் கூட்டம் (24-12-2022)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்,, உப தலைவரும், பொது செயலாளரும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களும், பார்வையாளராக ஒரு உறுப்பினரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் நவம்பர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைகளுக்கு கேட்டு கடிதங்கள் எழுதப்பட்டன. அவற்றில் கடலூர் மாவட்டத்தை தவிர மற்ற மாவட்டங்களிலிருந்து மூன்றாண்டு வரவு செலவு கணக்குகள், உறுப்பினர் முதலியவை பற்றி பதில் ஏதும் வரவில்லை... எந்த ஒரு பதிலும் 31/12/2022-குள் கிடைக்கப் பெறாவிடில், சம்மந்தப்பட்ட கிளைகளை மூட உத்திரவிட பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது.

3. அமைச்சர் **செந்தில் பாலாஜி வழக்கு**: திரு செந்தில் பாலாஜி அவர்கள் மீதான வழக்குகளை மீண்டும் ஆரம்பம் முதல் விசாரிக்க வேண்டும்; அதுவும் “முந்தைய விசாரனையை முழுவதுமாக ரத்து செய்து, புதிய சான்றாவனங்களைக் கண்டுபிடித்து, அதன் அடிப்படையில் தான் குற்ற அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது” குறித்து அதிர்ச்சியடைவதாகவும், ஏற்கனவே கிடைத்த ஆதாரங்களே செவ்வனே ஊழலை நிரூபிக்கும்போது, அவற்றை நீக்கிவிட்டால், புதியதாக எந்தவொரு சான்றாவனமும் கிடைக்கப்போவதில்லை. ஆக, தீர்ப்பு, குற்றவாளிகளை அப்பட்டமாக விடுதலை செய்வதாகிறது. செந்தில் பாலாஜி தமது அமைச்சர் பதவியை துஷ்பிரயோகம் செய்து, போலீசின் வாயை அடக்கி இத்தீர்ப்பை பெற்றுள்ளது அப்பட்டமாகத் தெரிகின்றது என்று ஒவ்வொரு உறுப்பினரும் கவலை தெரிவித்தனர். எனவே, அவரது ஜாமீனை ரத்துசெய்வது மற்றும் இதில் சம்பந்தந்தப்பட்ட போலீசாரையும் குற்றவழக்கில் தண்டிக்க வேண்டுவது உட்பட, இவ்வழக்கில் நீதியை நிலைநாட்ட அனைத்து சட்டப்போராட்டங்களை நடத்தவும், இது போன்ற அநீதிக்கு வழிவகை செய்யும் சட்டங்களை நீக்கவும் அதற்கான உரிய வழக்குகளைத் தொடுக்கவும், தொடர்ந்து நடத்தத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் செயற்குழு பொதுச்செயலாளருக்கு அளித்து தீர்மானிக்கிறது. இச்சங்கத்தின் வழக்குகளை, எந்தவித பணப்பயனும் இன்றி இலவசமாக நடத்திக் கொடுக்கும் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பிரசாந்த் பூசன், பிரணவ் சச்தேவா, மற்றும், ந.சுப்ரமணியன் ஆகியோருக்கு இச்செயற்குழு இருகரம் கூப்பி நன்றியைக் காணிக்கையாக்குகிறது.

4. நீதி மன்றத்தில் அதிகமாக வாய்தா வழங்குவதால் தீர்ப்புகள் தாமதமாகின்றன. இவற்றை நிவர்த்தி செய்ய வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். வாய்தாவுக்கு அபராதம் விதித்தோ, வழக்குறைஞர்களுக்கு தற்கால இடைநீக்கமோ செய்து சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதற்கான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல்பட வேண்டும் . இதற்கான வடிவு மனுவை நமது செயலாளர் (சட்டம்) தயார் செய்யும்படி செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

5. திரு மனுராஜ் அவர்களிடமிருந்து எந்த ஒரு பதிலும் வரவில்லை. நமது இயக்க உறிப்பினர் திரு அரங்கராஜன் அவர்கள் திரு மனுராஜை நேரில் சந்தித்து பதில் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுமாறு செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

6.. உடல்நிலை காரணமாக நமது நிதிச் செயலாளர் தொடர்ச்சியாகப் பணியாற்ற முடிய முடியவில்லை. எனவே பொது செயலாளர் நிதிச் செயலாளர் பொறுப்பை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ள தீர்மானம் நிறைவேறியது.

7. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம் ஒப்பம்

ந சுப்ரமணியன்
.தலைவர்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு

## மின்வாரிய அதிகாரி - மனைவிக்கு 5 ஆண்டு ஜெயில்

### ரூ.1 கோடி அபராதமும் விதித்து ஈரோடு கோர்ட்டு தீர்ப்பு

ஈரோடு, நவ.30-

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் ஈரோடு மின்வாரிய தலைமை பொறியாளருக்கும், அவரது மனைவிக்கும் தலா 5 ஆண்டு ஜெயில் தண்டனையும், ரூ.1 கோடி அபராதமும்விதித்துஈரோடு கோர்ட்டு தீர்ப்பு அளித்தது.



ஜெயில் தண்டனை பெற்ற மின்வாரிய அதிகாரி நடேசன், மல்லிகா தம்பதியை படத்தில் காணலாம்.

**வழக்குப்பதிவு**

ஈரோடு மின்சார வாரியத்தில் தலைமை பொறியாளராக கடந்த 1996-ம் ஆண்டு முதல் 2008-ம் ஆண்டு வரை கே.ஜி.நடேசன் (வயது 67) பணியாற்றினார். அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வந்த புகாரை தொடர்ந்து கடந்த 2008-ம் ஆண்டு ஈரோடு லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரது வீட்டில் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

இதில், நடேசன் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்து இருந்ததும், அவரது பெயரிலும், தனியார் கல்லூரி பேராசிரியையான அவரது மனைவி மல்லிகாவின் (65) பெயரிலும் ரூ.2 கோடியே 6 லட்சத்து 69 ஆயிரத்துக்கு சொத்து இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து நடேசன், அவரது மனைவி மல்லிகா ஆகியோர் மீது ஈரோடு லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

**ரூ.1 கோடி அபராதம்**

நடேசன், மல்லிகா ஆகியோர் மீது ஈரோடு மாவட்ட முதன்மை கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்து வந்த நீதிபதி சரவணன் நேற்று தீர்ப்பு அளித்தார். அதில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றத்துக்காக நடேசன், அதற்கு உடந்தையாக இருந்த அவரது மனைவி மல்லிகா ஆகியோருக்கு தலா 5 ஆண்டு ஜெயில் தண்டனையும், அவர்களுக்கு தலா ரூ.50 லட்சம் வீதம் மொத்தம் ரூ.1 கோடி அபராதம் விதித்தும் நீதிபதி தீர்ப்பு கூறினார்.

தலைமை பொறியாளராக பணியாற்றிய நடேசன் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## லஞ்ச வழக்கில் நேரடி சாட்சியம் அவசியம் இல்லை

### சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு

புதுடெல்லி, டிச.17-

லஞ்ச வழக்கில் சிக்கிய ஊழியரை தண்டிக்க நேரடி சாட்சியம் அவசியமா? என்பது குறித்த தீர்ப்பை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அப்துல் நசீர், பி.ஆர்.கவாய், ஏ.எஸ்.போபன்னா, வி.ராமசுப்ரமணியன், பி.வி.நாகரத்னா அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்தது. இது தொடர்பான விசாரணையின்போது மூத்த வக்கீல் எஸ்.நாகமுத்து ஆஜராகி வாதிட்டார். அனைத்து வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் கடந்த நவம்பர் 22-ந்தேதி தள்ளிவைத்தனர்.

இந்த வழக்கில் நீதிபதிகள் தீர்ப்பு அளித்தனர். இந்த தீர்ப்பின் சாராம்சம் வருமாறு:-

பொது ஊழியருக்கு லஞ்சம் கொடுத்தவர் இறந்து விட்டாலோ, லஞ்சம் கொடுக்கவில்லை என மாற்றி சாட்சியம் அளிக்கும் சூழலில் அந்த ஒரு காரணத்துக்காக அவரை லஞ்ச வழக்கில் இருந்து விடுவிக்க முடியாது.


பொது ஊழியர் லஞ்சம் கேட்டது தொடர்பாகவோ, லஞ்சம் பெற்றது தொடர்பாகவோ வேறு சாட்சியங்களோ, சந்தர்ப்ப சாட்சியங்களோ இருந்தால் அவை குற்றத்தை நிருபிக்க போதுமானவையாக இருக்கும்பட்சத்தில் பொது ஊழியர் தண்டிக்கப்படலாம். நேரடி சாட்சியம் அவசியம் இல்லை. ஊழல் லஞ்ச புகார் வழக்குகளில் விசாரணை அமைப்புகள், கோர்ட்டுகள் தனிக்கவனம் செலுத்தி, லஞ்ச லாவண்யத்தில் ஈடுபடுவோர்களுக்கு கடும் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்

இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

## Study shows T.N. is worst performing in RTI responsiveness

While the Tamil Nadu Information Commission furnished only 14% c[…] details sought, Maharashtra was second worst, sharing 23% of data

Sreeparna Chakrabarty
NEW DELHI





The State Information Commission of Tamil Nadu has been the worst performing in responsiveness under the Right to Information Act, furnishing only 14% of the information sought.

Maharashtra was the second worst, sharing 23% of the information asked for, according to a report card on the performance of Information Commissions (ICs) in India for 2021-22 by the Satark Nagrik Sangathan.

Only 10 ICs provided full information in response to the RTI applications filed as part of this assessment. These included Andhra Pradesh, Haryana and Jharkhand and the north-eastern States of Sikkim, Nagaland and Tripura.

The organisation said that as part of the assessment, in order to access information about the functioning of ICs, it filed RTI applications with the 28 State Information Commissions (SICs) and the Central Information Commission (CIC).

"A total of 145 RTI applications were filed seeking identical information from all the 29 ICs. The RTI applications were tracked to assess how each IC performed as a public authority, in terms of maintaining and disclosing information," it said.

"The SIC of Tamil Nadu was the worst performing as it denied most of the information sought, including regarding the number of appeals and complaints dealt with by the IC, details of penalty imposed and compensation awarded stating that the information could be provided only 'after getting the approval of State Legislative Assembly'," though no such provision exists in the RTI Act.

**No orders passed**

The SIC of Chhattisgarh denied information on several points stating that under the prevailing State rules, in one application, information on only one topic could be sought, while the SIC of Bihar, which failed to provide any information under the RTI Act for the assessments publish[…] 2020 and 2021, signif[…]ly improved its p[…]mance and furnishe[…] of the information th[…] sought.

The report card f[…] said that a large num[…] ICs across the co[…] were returning cases[…] out passing orders. […] Pradesh and Andhr[…]desh returned aroun[…] of the appeals or […]plaints received by th[…]

Of the 18 Inform[…] Commissioners who[…]vided relevant inf[…]tion, the assessment […] that 11 returned appe[…] complaints without […]ing any orders.

It also found that s[…] ICs have an extreme[…] rate of disposal per […]missioner. Of all the 2[…] only the CIC has ado[…] norm on the number […]peals or complaints disposed of by each […]missioner in one yea[…]


THE TIMES OF INDIA

## Fake lawyer serves as 'magistrate' for 21 yrs

### Even Draws Pension After Retirement

A.Subramani@timesgroup.com

**LAW OFFICERS UNDER SCANNER**



**742** lawyers debarred because they did not have proper educational qualifications

**90,000** lawyers are registered with the Bar Council Of Tamil Nadu And Puducherry

> 56,000 submitted documents for verification

> More than 4,000 have not cleared necessary examination

**2,000** identified as fake lawyers

**Chennai:** It is perhaps time to look for fake judicial officers too, not just fake lawyers. The authorities at the Bar Council of Tamil Nadu and Puducherry are yet to get over the shock of finding that a man managed to served the Tamil Nadu judicial service as a magistrate for more than 21 years without any recognised law degree.

Responding to a show-cause notice from the Bar Council, the 'magistrate', P Natarajan of Ulaganeri in Madurai, said, "It is not fair and justified to cancel enrollment as advocate of a person who was in judicial service for more than 25 years, including 21 years as judicial magistrate."

Natarajan said he did his BGL 'course' at Sarada Law College affiliated to Mysore University in Karnataka for two years through correspondence/distance education mode and was awarded a 'degree'. Apparently, he attended classes only for the third year during 1975-78.

At the time of the convocation, he told the Bar Council, he was not informed that his degree was valid only for 'academic' purposes and not for employment.

He was then selected as judicial magistrate on February 15, 1982, and after a 'peaceful' tenure of nearly 22 years, he retired on June 30, 2003.

As if this was not enough, within a month of his retirement, he enrolled himself Jas lawyer with the Bar Council of Tamil Nadu and Puducherry and was assigned enrolment number MS1739/2003.

After the Supreme Court ordered verification of certificates, the Bar council authorities stumbled upon his case and slapped a showcause notice on Natarajan on January 4, 2016.

The notice traced the academic as well as service history of Natarajan and called upon him to explain why he should not be removed from the rolls.

▶ Removed lawyers, P 6

# பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு ₹7500 நஷ்ட ஈடு வழங்க வேண்டும்

## தனியார் எரிவாயு நிறுவனத்துக்கு நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு

நாகர்கோவில், ஜன.4-

காஸ் சிலிண்டர் விநியோகத்திற்கு ரூ.15 அதிகம் வாங்கிய எரிவாயு நிறுவனம் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு ரூ.7500 நஷ்டஈடு வழங்க வேண்டும் என சேவை குறைபாட்டை சுட்டிக்காட்டி குமரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் வட்டக்கரை கோணத்தை சேர்ந்தவர் மேரி புஷ்ப ராணி. கே.பி. ரோட்டில் உள்ள தனியார் எரி வாயு நிறுவனத்திடம் சிலிண்டர் முன் பதிவு செய்திருந்தார். பில்லில் சிலிண்டரின் விலை ரூ.969 மற்றும் ரூ.15 ஆக மொத்தம் ரூ.984 என்று குறிப்பிடபட்டிருந்தது. ஆனால் சிலிண்டரின் விலை வரிகள் உள்பட சேர்த்து ரூ.969 மட்டுமே.

எனவே நுகர்வோரிடம் ரூ.15 அதிகமாக பெற்றது நேர்மையற்ற வணிக நடைமுறையாகும். அதை திரும்பி தர வேண்டுமென்று நுகர்வோர் எரிவாயு நிறுவனத்திடம் கேட்டார். அதோடு பல நுகர்வோர் குறைதீர்க்கும் அரசு அமைப்புகளிடமும் புகார் செய்தார். மேலும் வழக்கறிஞர் முலம் விளக்கம் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால் உரிய பதில் கிடைக்கவில்லை.

இதனால் மனஉளைச்சலுக்கு ஆளான மேரி புஷ்ப ராணி குமரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் சுரேஷ், உறுப்பினர் சங்கர் ஆகியோர் எரி வாயுநிறுவனத்தின் சேவை குறைபாட்டை சுட்டிக்காட்டி பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடாக ரூ.7500, கூடுதலாக வசூலித்த ரூ.15 மற்றும் வழக்கு செலவு ரூ.2500 ஆகமொத்தம் ரூ.10015 ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் வழங்கிட உத்தரவிட்டனர்.

# வாலிபரிடம் வழிப்பறி போலீஸ்காரர் கைது

திருச்சி, டிச. 19-

திருச்சியில், 'டூ – வீலரில்' சென்ற வாலிபரிடம் மொபைல் போன்களை பறித்துச் சென்ற போலீஸ் காரர் கைது செய்யப்பட்டார்.

திருச்சி, அரியமங்கலம் அருகே, காமராஜ் நக ரைச் சேர்ந்தவர் ரியாசின், 18. டூ – வீலர் மெக்கா னிக்கான அவர், நேற்று முன்தினம், உறவினர்கள் மூன்று பேருடன் ஒரு பைக்கில், புதிய வெங்காய மண்டி சாலையில் சென்றார்.

அப்போது, அவர்களை வழி மறித்த ஒருவர் போலீஸ்காரர் என்று அறிமுகப்படுத்தி, லைசென்ஸ் ஆர்.சி., போன்றவற்றை கேட்டுள்ளார்.

தொடர்ந்து, ரியாசின் மற்றும் அவரது உறவினர் கள் வைத்திருந்த மொபைல் போன்களை பறித்த அவர், ஸ்டேஷனில் வந்து வாங்கிக் கொள்ளுங் கள் என்று கூறி விட்டுச் சென்றார்.

ரியாசின், காந்தி மார்க்கெட் போலீஸ் ஸ்டே ஷனுக்கு சென்று விபரத்தை சொல்லி விசாரித்த போது, அந்த ஸ்டேஷனை சேர்ந்த யாரும் இல்லை என்பது தெரிந்தது.

ஆனால், திருவெறும்பூர் ஸ்டேஷனில் போலீஸ்காரராக இருக்கும் மணிவேல், 39, என பவர் மொபைல் போன்களை பறித்துச் சென்றது தெரிந்தது. சில நாட்களாக பணிக்கு செல்லாமல் இருந்த அவர் மீது அடிதடி வழக்கு போன்றவை நிலுவையில் இருப்பதும் தெரிய வந்தது.

புகாரின்படி, இன்ஸ்பெக்டர் நாஞ்சில்குமா வழக்குப் பதிந்து, போலீஸ்காரர் மணிவேலை நேற்று கைது செய்தார்.




**மோர்பி பால விபத்து நடந்த இடத்தை பிரதமர் மோடி சென்று பார்வையிட்டதற்கு ₹30 கோடி செலவு. இறந்த 135 பேருக்கான நிவாரணம் ₹5 கோடி; ஆனால், மோடிக்கான ' PR & Photography 'க்கு ஆன செலவு ₹5.5 கோடி**

**- திரிணாமுல் காங். செய்தி தொடர்பாளர் சகெத் கோகலே காட்டமான ட்வீட். !**

/ namdinamathi 01.12.2022

நிருபர்கள் தேவை தொடர்புக்கு 8940049138

Registrar of News Papers for India under register No. TNTAM 2009/32364

# தேசிய சுடர்

DESIA SUDAR desiasudar.page

Online News: desiasudar.page, Youtube: desiasudar, Facebook: desiasudar facebook, Twitter: twitter.com/desia_sudar

## காட்பாடி மின்சார வாரியத்தில் வணிக ஆய்வாளர் சரவணனின் வசூல் வேட்டை?



30:12:2022 சரவணன்

வேலூர் மாவட்டம், காட்பாடி காந்தி நகரில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் காந்திநகர் கிழக்கு பிரிவு வணிக ஆய்வாளராக இருப்பவர் சரவணன். இவர் இதே இடத்தில் 4 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாக சொல்லப்படுகிறது. இவரிடம் தற்காலிக மின் இணைப்பு, லைன் மாற்றம் மற்றும் இவரது பணிசம்மந்தமான எந்த பணிகள் செய்ய வேண்டும் என்று யார் வந்தாலும் ஒரு குறிப்பிட்ட தொகையை லஞ்சமாக கேட்பாரா ம். இதனால் அப்பகுதி மக்கள் என்னசெய்வது என்று தெரியாமல் தவிப்பதாக சொல்லப்படுகிறது. மின்வாரியத்தில் நேர்மையான உயர் அதிகாரிகள் இருந்தும் இவரது செயல்பாட்டை கண்டிக்காததால் பாதிக்கப்பட்ட மக்கள் லஞ்ச ஒழிப்புத்துறையை புகார் கொடுக்கப் போவதாக சொல்லப்படுகிறது. இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரி உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

விரைவு செய்திகள் தேசியசுடர்: 8940049138, 9360540182

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- ஜனவரி 2023**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

**வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்க,**

## ஒவ்வொருவரும் ஓர் ஊடகமாக - பத்திரிக்கையாக செயல்படுவீர்!

1 – ஜெட் ஏர்வேஸ் கதை முடிந்தது ..
2 – ஏர் இந்தியா அதிக பட்ச நஷ்டத்தில் ...
3 – BSNL's ன் 54,000 பேர் வேலை இழக்கும் அபாயத்தில் ...
4 – HAL நிறுவனத்தில் சம்பளம் போட பணமில்லை ...
5 – தபால் துறை 15000 கோடி ரூபாய் நஷ்டத்தில் என்ற செய்தி ..
6 – வீடியோகான் நிறுவனம் வங்கிக் கடனில் சிக்கி சீரழிவு ...
7 – டாடா டொகாமோ நசுக்கப்பட்டது ..
8 – ஏர்டெல் நசுக்கப்பட்டது..
9 – JP குரூப் கதை முடிந்தது ..
10 – ONGC ன் மிக மோசமான நிலை ...
11 – அதிக அளவு கடன் வாங்கிய , நாட்டின் முதல் 36 பேர் தற்போது உள்நாட்டில் இல்லை ...
12 – 35 மில்லியன் கோடி அளவிலான கடன் தள்ளுபடி கேட்டு வரிசையில் காத்திருக்கும் பலர் ..
13 – PNB அதோகதி ...
14 – மிச்சமிருக்கும் வங்கிகளும் தொடர் நஷ்டத்தால் திணறும் சூழல் –
15 – நாட்டின் மீதான கடன் 131100 மில்லியன் டாலர் ..
16 – விற்பனையில் ரெயில்வே ...
17 – செங்கோட்டை உட்பட நாட்டின் புராதன சின்னங்கள் வாடகைக்கு ...
18 – பணமதிப்பிழப்பிற்கு பின் வேலையிழந்து திண்டாடும் பல லட்சம் பேர் ..
19 – 45 வருடங்களாக இல்லாத – வேலைவாய்ப்பின்மை ..
20 – முந்தைய ஆட்சியில் இறந்தவர்களை விட மூன்று மடங்கு அதிக – படை வீரர்கள் உயிரிழப்பு ..
21 – 5 விமான நிலையங்கள் அதானிக்கு ..
22 – உள்நாட்டு உற்பத்தி / தேவைகள் வீழ்ச்சி ..
23 – நாட்டின் மிகப் பெரிய வாகன உற்பத்தி நிறுவனம் மாருதி – தனது உற்பத்தியை குறைத்தது ..
24 – வாங்க ஆளில்லாமல் – ரூ. 55000 கோடி மதிப்பிலான கார்கள் தயாரிப்பு தொழிற்சாலைகளில் கிடக்கின்றன ...

**எச்சரிக்கிறோம் நண்பர்களே .. நாடு ஆபத்தான பாதையில் பயணிக்கிறது ..!!**

**இதில் எதுவும் ஊடகங்களில் – மீடியாக்களில் வராது ...!!**

**நீங்கள்தான் – இந்தச் செய்திகளை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் ..!!!**

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Jan 2023
Due to corona published online)

.
எத்துணை ஆயினும் ஈதல் நன்று

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!